S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு டிசம்பர் 07 * 2025 * மலர் -1 * இதழ்-189* VOL-1 * ISSUE-189 விலை ரூ.3 * பக்கம் -4

# தாயுமானவர் திட்டம் உள்பட கல்வி, சுய தொழில் நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!!






சென்னை, டிச.7

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் அமைச்சர்பெருமக்கள்கலந்துகொண்டுநலத்திட்டஉதவிகளைவழங்கினார் . தமிழக மக்களுக்கு ரேஷன் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. ரேஷன் கடைகள் மூலமாக ரேஷன் பொருட்கள் வழங்கப்படுவது மட்டுமல்லாமல், மகளிர் உரிமைத் தொகை, பொங்கல் பரிசுத் தொகுப்பு போன்ற உதவிகளும் ரேஷன் அட்டைதாரர்களுக்குக் கிடைக்கிறது. இந்நிலையில், வயதானவர்கள் மற்றும் ரேஷன் கடைக்கு வர முடியாத அளவுக்கு உடல் ரீதியாக இயலாமல் உள்ள மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு வீட்டுக்கே வந்து ரேஷன் பொருட்களை டெலிவரி செய்யும் தாயுமானவர் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழக மக்களுக்கு ரேஷன் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. ரேஷன் கடைகள் மூலமாக ரேஷன் பொருட்கள் வழங்கப்படுவது மட்டுமல்லாமல், மகளிர் உரிமைத் தொகை, பொங்கல் பரிசுத் தொகுப்பு போன்ற உதவிகளும் ரேஷன் அட்டைதாரர்களுக்குக் கிடைக்கிறது. இந்நிலையில், வயதானவர்கள் மற்றும் ரேஷன் கடைக்கு வர முடியாத அளவுக்கு உடல் ரீதியாக இயலாமல் உள்ள மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு வீட்டுக்கே வந்து ரேஷன் பொருட்களை டெலிவரி செய்யும் தாயுமானவர் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் இவர்களுக்கு பெரிய நிவாரணம் கிடைத்துள்ளது. ரேஷன் கடைகளுக்கு நீண்ட தூரம் அலைவது மற்றும் வரிசையில் நீண்ட நேரம் காத்திருப்பது போன்ற சிரமங்கள் குறைந்துள்ளன.

சம்பந்தப்பட்ட ரேஷன் கடைகளின் அறிவிப்புப் பலகையில் ரேஷன் டெலிவரி தேதியை பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை பயனாளிகள் பயன்படுத்திக் கொள்ள அரசு தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழக அரசு வெளியிட்டுள்ளஇந்தஅறிவிப்பால்பயனாளிகள்மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில்இன்று காலைநடந்த அரசு நிகழ்ச்சியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.



திருப்பூர்கிழக்கு மாவட்டம் மூலனூர் பேரூராட்சிக்குட்பட்ட அண்ணாநகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு (2025 –2026) திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து பயணியர் நிழற்குடை அமைக்கும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தலைமையில் பூமி பூஜை போடப்பட்டது. இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இல. பத்மநாதன், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருவெண்ணெய்நல்லூர் அடுத்த இருவேல்பட்டு கிராமத்தை சேர்ந்த இராஜீவ்காந்தி தந்தை ஆறுமுகம் மறைவையொட்டி அவரது திருவுருப்படத்திற்கு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் உதயசூரியன் சட்டமன்ற உறுப்பினர் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சந்திரசேகரன்,மாவட்ட கவன்சிலர் மற்றும் பிரேம் சக்கரவர்த்தி அய்யனார் சுரேஷ் உடன் இருந்து பூ தூவி மரியாதை செலுத்தினார்கள்.



சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தும் அப்பகுதிகளில் வசிக்காதவர்கள், இடம்பெயர்ந்தோர் மற்றும் இறந்தோர்களின்பெயர்ப்பட்டியல்கள்சரிபார்த்துவழங்கிடவாக்குச்சாவடிநிலைஅலுவலர் வாயிலாக சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி முகவர்களிடம் வழங்கப்பட்டது.

## திருக்கோவிலூர் தலைமை மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

கள்ளக்குறிச்சி,டிச.7



தமிழ்நாடு முதலமைச்சர் கள்ளக்குறிச்சி விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை புரிவதாககூறுவதையொட்டி சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் நடைபெற்று வரும் சுகாதாரத்துறை பணிகளை தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டார் அந்த வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி 50 கோடி மதிப்பீட்டில் புதிய 300 படுகைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது

அந்தப் பணியினை இன்று பார்வையிட்டார் மேலும் ஏற்கனவே உள்ள பழைய கட்டிடத்தை பார்வையிட்ட போது மருத்துவமனை வளாகம் முழுவதும் அசுத்தமாக இருந்துள்ளது இதனை அடுத்து அங்கிருந்த மருத்துவர்களை அழைத்து ஏன் மருத்துவமனை வளாகம் இவ்வளவு அசுத்தமாக உள்ளது என கேள்வி எழுப்பு கடிந்து கொண்டார். தற்போது தூய்மை செய்யும் பணி நடைபெற்று வருவதால் உடனடியாக அவை சரி செய்யப்படும் என அங்கிருந்து மருத்துவர்கள் விளக்கம் அளித்தனர் அதன் பின்னர் புதிதாக கட்டப்பட்டு வரும் மாவட்டம் மருத்துவமனையை பணிகளை நேரில் பார்வையிட்டார். இமாத இறுதிக்குள் அனைத்து பணிகளும் முடிந்து முதலமைச்சர் திறந்து வைக்கப்பட உள்ளதாக கூறப்படும் நிலையில் அந்த கட்டிடத்தையும் அமைச்சர் மாசுப்பிரமணியன் பார்வையிட்டார்.

## புவனம் நீயூஸ் 5-ம் ஆண்டு விழா!

### சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்க தலைவர் சரவணன் பங்கேற்பு

ஆம்பூர் டிச 7,



கடந்த 5 ஆண்டுகளாக திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் இருந்து வெளிவரும் புவனம் நீயூஸ் வார இதழின் முப்பெரும் விழா அப்பகுதியில் அமைந்துள்ள ரங்காலயா திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் புவனம் நீயூஸ் வார இதழின் 5 ஆண்டு துவக்க விழா, சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா என முப்பெரும் விழாவாக நடைபெற உள்ளது. இந்த விழாவில் தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்க தலைவர் சரவணன் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார். மேலும் இந்த விழாவிற்கு மாணிக்கம் தலைமை வகிக்க, புவனேஸ்வரன் வரவேற்புரை ஆற்றுகின்றார்.



திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர்.உதயநிதி ஸ்டாலினை கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட.கழக.செயலாளரும்,ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் பட்டாடை அணிவித்து, வரவேற்றார்.



சென்னை மாநகராட்சி, மணலி மண்டலத்திற்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மணலி மண்டலத்திற்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



## தாராபுரத்தில்
# வாக்காளர் பட்டியல் திருத்தம் அதிகாரிகள் முன்னிலையில் மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பேரணி!

தாராபுரம் டிச.7

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சட்ட மன்றத் தொகுதி சார்பில் 2026 பொதுத் தேர்தலை முன்னிட்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது புதிய நகராட்சி அலுவலகத்தில் இருந்து பேரணியை தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர்ஃபிலிக்ஸ் ராஜா கொடியசைத்து தொடங்கி வைத்தார் இந்நிகழ்வில் வருவாய்வட்டாட்சியர்ராமலிங்கம், நகராட்சி ஆணையாளர் முஸ்தபா, நகர்மன்ற தலைவர் பாபு கண்ணன், கவுன்சிலர் முருகானந்தம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர் நகராட்சி அலுவலக நுழைவாயிலில் தொடங்கிய பேரணி கரூர் சாலை அரசு மருத்துவமனை சாலை,தாலுகா அலுவலகம் சாலை,சர்ச் ரோடு சாலை,அண்ணா சிலை,பூக்கடை தெரு, பெரிய கடை வீதி, பொள்ளாச்சி ரோடு,அமராவதி ரவுண்டானாஉள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்றது

பேரணியில் 200க்கும் மேற்பட்ட மாணவ மற்றும் மாணவியர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்காளர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினர் பேரணி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நிறைவுற்றது பின்னர் பொது மக்களிடம் கருத்து தெரிவித்த வருவாய் கோட்டாட்சியர் பிலிக்ஸ் ராஜா,2026 பொது தேர்தலை முன்னிட்டு மாநிலம் முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார் 18 வயது நிறைவடைந்த இளைஞர்கள் புதிய வாக்காளராக சேர விண்ணப்பிக்க வேண்டும் என்றும் ஏற்கனவே பதிவில் உள்ளவர்கள் தங்களின் பெயர் முகவரி வயது உள்ளிட்ட விபரங்கள் சரியாக உள்ளதா என்பதை சரி பார்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்

மேலும், இடமாற்றம் செய்தவர்கள் முகவரி மாற்றம் திருமணத்தால் பெயர் மாற்றம் உள்ள பெயர் திருத்தம் இறந்தவர்களின்பெயர்நீக்கம்உள்ளிட்டதேவையான மாற்றங்களை உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும் என்றார் இதற்காக நகராட்சி, ஊராட்சி, வருவாய் அலுவலகங்கள், அங்கன்வாடி மற்றும் வருவாய் மையங்களில் சிறப்பு கவுண்டர்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் எளிதில் பயன்பெறலாம் என்றும் தெரிவித்தார். வாக்காளர் விவரங்களை ஆன்லைனில் சரி பார்க்கவும் திருத்தவும் www.nvsp.in தளம் மற்றும் voter helpline app பயன்படுத்தலாம் என்றும் கோட்டாட்சியர் பிலிக்ஸ் ராஜா கூறினார் வாக்காளர் பட்டியலில் தங்களின் பெயர் சரியாக உள்ளதற்கு அனைவரும் இந்த சிறப்பு காலகட்டத்தைபயன்படுத்திக்கொள்ளவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.



## ஆளுநர் ரவியை கண்டித்து
# தாராபுரம் நகர திராவிட கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம்!

தாராபுரம் டிச.7

தாராபுரம் நகர திராவிட கழகத்தின் சார்பில் தமிழ்நாடு ஆளுநர் ரவியை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தாராபுரம் நகர இளைஞர் அணி அமைப்பாளர்கு. கோடிஸ்வரன்வரவேற்புரையாற்றினார் நகரத் தலைவர் இரா. சின்னப்பதாஸ் தலைமை ஏற்றார் இதில் பங்கு கொண்ட திராவிடர் கழக தோழர்கள் க.கிருஷ்ணன் மாவட்ட தலைவர் ஜெ.தம்பி பிரபாகரன் மாவட்ட செயலாளர் ச.ஆறுமுகம் மாவட்டத் துணைத் தலைவர் நா.மாயவன்மாவட்டதுணைச் செயலாளர் கே.என்.புள்ளியான் கழக காப்பாளர். கி.மயில்சாமி,நா.சக்திவேல் பொதுக்குழு உறுப்பினர்கள் தாராபுரம் ஒன்றிய செயலாளர்ச.முருகன்உடுமலை ஒன்றிய செயலாளர் முருகேசன் மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் தங்கவேலு உடுமலை ஒன்றிய செயலாளர் கந்தவேல் கடத்தூர் பெரியார்பித்தன் கணியூர் அர்ஜுனன் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தோழமைக் கட்சி தோழர்கள் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் முத்தமிழ் வேந்தன் மாநில துணை செயலாளர் விவசாய அணி,தமிழ் முத்து முன்னாள் மாவட்ட செயலாளர்,ஆற்றல் அரசு, மாநில துணைச் செயலாளர் தொழிலாளர் அணி நா செந்தில்குமார், நகரச் செயலாளர் வளவன் வினோத் இந்திய தேசிய காங்கிரஸ் அப்துல் கபூர் மாவட்ட செயலாளர், கே கே வேலுச்சாமி ஆதித்தமிழர் பேரவை ராஜேந்திரன் மாவட்ட செயலாளர், சுகன்யா மாவட்ட மாணவரணி செயலாளர், ராஜேந்திரன் கந்தசாமி தமிழ் புலிகள் கட்சி முகிலரசன், மாநில முதன்மைச் செயலாளர் ராசசேகர்,மாவட்ட செயலாளர் தண்டபாணிநகர செயலாளர், தனசேகர் குண்டடம் ஒன்றிய செயலாளர் மே17 தாரை மணி, மக்கள் நீதி மையம் கலையரசன் மாவட்டச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு மாபெரும் நீண்ட ஒரு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இறுதியாக தாராபுரம் நகரச் செயலாளர் முகமது சித்திக் நன்றியுரை ஆற்றினார்.



ராஜபாளையம் வடக்கு நகர அதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி அமைப்புச் செயலாளர் விருதுநகர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் கே டி ராஜேந்திர பாலாஜி வழிகாட்டுதலின்படி சிறப்பாக நடைபெற்றது வடக்கு நகர செயலாளர் வக்கீல் துறை முருகேசன் தலைமையில் ராஜபாளையம் பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்து அன்னதானம் வழங்கப்பட்டது மாவட்ட, வடக்கு நகர, வார்டு நிர்வாகிகள்,பூத்து கமிட்டி நிர்வாகிகள், மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோவையில் சுற்றித்திரியும் 10ஆயிரம் தெருநாய்கள்!
## முகாம்களில் பராமரிக்க முடிவு!!

கோவை, டிச.7

கோவை மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில்10 ஆயிரம் தெருநாய்களை பிடித்து முகாம்களில் பராமரிக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. கோவை மாநகரில் பேருந்து நிலையங்கள்லரெயில் நிலையங்கள், கலெக்டர் அலுவலகம், பள்ளி, கல்லூரிகள் போன்ற பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் பகுதிகளில் தெருநாய்கள் அச்சுறுத்தல் பல ஆண்டுகளாக தொடர்ந்து வருகிறது, இந்த நிலையில் இவ்விடங்களில் இருந்து குறைந்தது 10 ஆயிரம் தெருநாய்களை அகற்றி பாதுகாப்பு முகாம்களில் வைத்துப் பராமரிக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது,

கோவை மாநகராட்சி ஏற்கனவே வெள்ளலூரில் சுமார்1000 தெருநாய்கள் பராமரிக்கும் வசதியுடன் ஒரு பாதுகாப்பு முகாமை அமைக்கும் பணியைத் தொடங்கியுள்ளது,எதிர்காலத்தில் இந்த பராமரிப்பு பகுதியை மேலும் அதிகரிக்கவும் மாநகராட்சி திட்டமிட்டுள்ளது, அதே போல வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்களிலும் ஆயிரம் முதல் இரண்டாயிரம் வரை தெருநாய்களை பராமரிக்கும் இரண்டு புதிய முகாம்கள் அமைக்கப்பட உள்ளதாக அதிகாரி தெரிவித்துள்ளனர்.

## வாடிக்கையாளர் பராமரிப்பு மேம்படுத்த
# இசுஸு இந்தியா அறிமுகப்படுத்தும் தேசிய அளவிலான “ICare Winter Camp”!




சென்னை டிச.7

ISUZU Motors India நாடு முழுவதும் “ISUZU ICare Winter Camp” எனும் சிறப்பு சேவை முகாமை 2025 டிசம்பர் 8 முதல் 13 வரை அனைத்து அங்கீகாரம் பெற்ற சேவை மையங்களில் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது. ISUZU DMAX பிக்அப்கள் மற்றும் SUV வாகனங்களுக்கு முன்காப்பு பராமரிப்பு, சலுகைகள் மற்றும் பாதுகாப்பு பரிசோதனைகளை வழங்கும் இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு எளிதான, பாதுகாப்பான ஓட்டுநர் அனுபவம் கிடைப்பதே நோக்கமாகும்.

இந்த வின்டர் கேம்ப், இந்தியா முழுவதும் 100க்கும் மேற்பட்ட நகரங்களில் நடைபெற்றது. வாகன பராமரிப்பு தள்ளுபடி, இலவச பரிசோதனைகள் மற்றும் சீசன் ஸ்பெஷல் பலன்களுடன் அனைத்து ISUZU உரிமையாளர்களுக்கும் கூடுதல் நன்மைகள் வழங்கப்படுகின்றன. வாடிக்கையாளர்கள் அருகிலுள்ள டீலரை தொடர்பு கொண்டு அல்லது ISUZU இணையதளம் மூலம் முன்பதிவு செய்யலாம். “இசுஸு வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த தரச் சேவையை வழங்குவது எங்களின் முதன்மை பொறுப்பு.

## காவல்துறை,சட்ட அமலாக்கத் துறையினருக்காக
# இந்தியாவின் முதல் விரிவான 'VDA கையேட்டை' வெளியிட்டது CoinSwitch!



சென்னை , டிச.7

இந்தியாவின் மிகப்பெரிய கிரிப்டோ வர்த்தக தளமான CoinSwitch, "Virtual Digital Assets Decoded" என்ற கையேட்டை வெளியிடுவதாக இன்று அறிவித்துள்ளது. வேகமாக வளர்ந்து வரும் VDA (Virtual Digital Assets) சூழலைக் கையாள்வதில், இந்திய சட்ட அமலாக்க முகமைகள் (LEAs), சைபர் கிரைம் (Cybercrime) பிரிவுகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட, நாட்டின் முதல் விரிவான கையேடு இதுவாகும்.இவ்வெளியீடு குறித்து CoinSwitchன் இணை நிறுவனர் & CEO திரு. ஆஷிஷ் சிங்கால் அவர்கள் கூறியதாவது:

" கிரிப்டோ பயன்பாட்டில் மக்களிடையே பெரும் வரவேற்பைப்பெற்று,இந்தியாஉலகஅளவில்முன்னிலையில் உள்ளது, மேலும் 2025ல் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக Global Crypto Adoption Indexல் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்த வளர்ச்சியுடன், நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், பாதுகாப்பான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கிரிப்டோ சூழலை உருவாக்குவதற்கும் சேவை வழங்குநர்களுக்குப் பொறுப்பு உள்ளது. பாதுகாப்பானகிரிப்டோ சூழலை உருவாக்குவது சேவை வழங்குநர்களாகிய எங்களின் பொறுப்பு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் எங்கள் முயற்சியின் வெளிப்பாடே இந்தக் கையேடு என்றார்."

# ரியல்மீ P4x மற்றும் வாட்ச் 5: இந்தியாவில் அறிமுகம் !




கோயம்புத்தூர் டிச.7

இந்தியாவில் பரிந்துரைக்கப்படும் இளைஞர்களின் ஸ்மார்ட்போன் பிராண்டான ரியல்மீ P சீரிஸ், இன்று அதிவேகமான 7000mAh பேட்டரி மற்றும் GT பூஸ்ட், 90 FPS கேமிங் ஆதரவுடன்புதிய ரியல்மீP4x மற்றும் ரியல்மீ வாட்ச் 5 ஐ அறிமுகம் செய்துள்ளது. ரியல்மீ P4x டைமன்சிட்டி 7400 அல்ட்ரா 5ஜி சிப்செட், 18GB டைனமிக் ராம், 144Hz சன்லைட் டிஸ்ப்ளே, 50MP AI கேமரா மற்றும் 45W ஃபாஸ்ட் சார்ஜ் வசதியுடன் வருகிறது, இது கேமிங் மற்றும் மினிடிஜிட்டல் உற்பத்திக்கு சிறந்த அனுபவத்தை வழங்குகிறது. ரியல்மீ வாட்ச் 5 “மேக் இன் இந்தியா” உற்பத்தியில் உருவாக்கப்பட்டு, 1.97 அங்குல அமோஎல்ஈடி டிஸ்ப்ளே, 108 ஸ்போர்ட்ஸ் மோடுகள், சுயாதீன GPS, ஹெல்த் மானிட்டரிங் மற்றும் 20 நாள் பேட்டரி ஆயுட்காலம் ஆகியவற்றை வழங்குகிறது. இது AIoT சூழலில் முழுமையான செயல்திறனையும், வலிமையான வடிவமைப்பையும் ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விலை மற்றும் விற்பனைத் தகவல்கள்: ரியல்மீ P4x (6GB+128GB) ரூ. 13,499★, (8GB+128GB) ரூ. 14,999★, (8GB+256GB) ரூ. 16,999★ விலையில் realme.com, பிளிப்கார்ட் மற்றும் மெயின்லைன் சேனல்களில் டிசம்பர் 10 முதல் கிடைக்கும். ரியல்மீ வாட்ச் 5 டைட்டானியம் ப்ளாக், டைட்டானியம் சில்வர், மின்ட் ப்ளூ மற்றும் வைப்ரன்ட் ஆரஞ்சு வண்ணங்களில் ரூ. 3,999★ விலையில் வருகிறது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி 50 கோடி மதிப்பீட்டில் புதிய 300 படுகைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அந்தப் பணியினை பார்வையிட்டார் மேலும் ஏற்கனவே உள்ள பழைய கட்டிடத்தை பார்வையிட்ட போது மருத்துவமனை வளாகம் முழுவதும் அசுத்தமாக இருந்துள்ளது இதனை அடுத்து அங்கிருந்த மருத்துவர்களை அழைத்து ஏன் மருத்துவமனை வளாகம் இவ்வளவு அசுத்தமாக உள்ளது என கேள்வி எழுப்பு கடிந்து கொண்டார்.

## புதுக்கோட்டை அருகே
# விவசாயி சிங்கப்பூரில் நெஞ்சுவலியால் பரிதாபமாக உயிழந்தார்!

புதுக்கோட்டை டிச.7

புதுக்கோட்டை அருகே ஆலங்குடி விவசாயி சிங்கப்பூரில் நெஞ்சுவலியால் பரிதாப மாக உயிழந்த சம்பவம் அப்பகுதி மற்றும் உற்றார் உறவின ர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள பாச்சிக் கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட எம். ராசியமங்கலத்தைச் சே ர்ந்த கருப்பையா இவரது மனைவி சின்னப்பொண்ணு இவ ர்களுக்கு மகன் ஆனந்தன் (வயது 47 )

இவருக்கு மனைவி சுலோச்சனா (வயது(40). மகன் பரத்ராஜ் ( 19) இவர் சிவகாசியில் உள்ள தனியார் இன்ஜினியரிங் கல் லூரியில் 2 ம் ஆண்டும், மகள் பிரணிதா ஊரின் அருகில் உ ள்ள தனியார் பள்ளியில் 4 ம் வகுப்பும் என 2 குழந்தைகளோ டு வசித்து வந்தனர்.

ஆனந்தன் குடும்ப சூழ்நிலை காரணமாக பிழைப்பதற்காக கடந்த 15 ஆண்டுக்குமேல் சிங்கப்பூரில் டிரைவராக இருந்து வந்தார்.இவர் தற்போது ஊருக்கு வந்து குழந்தைகளுக்கு காதணி விழா நடத்திவிட்டு மீண்டும் 2 மாதத்திற்கு முன்பு சிங்கப்பூர் சென்று உள்ளார்.

இதையடுத்து சிங்கப்பூரில் இருந்த ஆனந்தனுக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு மயக்கமடைந்து கீழே விழுந்து உயிர்ழந்ததாக சிங்கப்பூரில் இருந்து சக பணியாளர்கள் போனில்தொடர்புகொண்டு மனைவிக்கு தகவல் கூறியதாக கூறப்படுகிறது.

இதையடுத்து குடும்ப த்தினர்கள் மற்றும் உறவினர்கள் அதிர்ச்சடைந்தனர் மேலும் கணவரது இறப்பு பேரிழப்பாகவும்,நம் பகத்தன்மையற்றதாகவும் இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இறந்த ஆனந்தனை மாவட்ட நிர்வாகம் உட னடியாக சொந்த ஊருக்கு கொண்டு வர வேண்டும் என அவ ரது மனைவி மற்றும் குடும்பத்தினர்கள் மத்திய மாநில அரசு கள் நடவடிக்கை எடுத்துகோரிக்கை விடுத்துள்ளனர்.



## ஆம்பூர் அருகே
# நாய்க்கனேரி மலைச்சாலையில் வாகன தணிக்கையின் போது நிற்காமல் சென்ற கார் பறிமுதல்!
## ஒருவர் கைது;ரகசிய தகவலின் பேரில் வனத்துறையினர் நடவடிக்கை!!

ஆம்பூர்.டிச.7

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த நாய்க்கனேரி மலைச்சாலையில் வனத்துறை சரக அலுவலர் பாபு தலைமையில் அதிகாரிகள் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக வந்த காரை நிறுத்திய போது நிற்காமல் சென்றதால் வனத்துறையினர் துரத்தி சென்ற போது கார் நாய்க்கனேரி புது எரியூர் கிராமத்தில் நிறுத்தி விட்டு தப்பி ஓடினர்.

காரை பறிமுதல் செய்து தப்பி ஓடிய மூவரில் நாய்க்கனேரி நடுவூர் கிராமத்தை சேர்ந்த சுதீப் என்பவர் கைது செய்து அவனிடம் வனத்துறையினர் தீவிர விசாரணை மேற்க்கொண்டு வருகின்றனர்.



## வேலம்பட்டியில்
# அ.தி.மு.க. சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு நினைவஞ்சலி!

கிருஷ்ணகிரி.டிச.7

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் வடக்கு, ஒன்றியம் & நாகரசம்பட்டி பேரூராட்சி அதிமுக சார்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின்

9ம்ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு நடைபெற்றது. காவேரிப்பட்டணம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கிருஷ்ணன் பேரூராட்சி செயலாளர் அண்ணாதுரை தலைமையில் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர். இந்த நிகழ்வில் எம்ஜிஆர் மன்ற மாவட்ட செயலாளர் கோ.ரவிச்சந்திரன், ஒன்றிய அவைத்தலைவர் வடிவேல்,ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு மணிகண்டன், இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை கார்திக், மருதேரி குமார், செந்தில், ஆவத்து வாடி சாம்பசிவம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மணி, சந்திரன், சிகாமணி பவித்திரன் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



### புதுக்கோட்டை அருகே

# அரசு பள்ளி வளாகம் தூய்மை, கழிப்பறை சுகாதாரம் இல்லை, ஆசிரியர் பற்றாக்குறை!

## பெற்றோர்ககள், மாணவர்கள் சாலை மறியல்!!

புதுக்கோட்டை.டிச.7

புதுக்கோட்டை அருகே உள்ள பள்ளத்திவிடுதி அரசு தொடக்கப்ப ள்ளி வளாகம் மற்றும் கழிவறைகள் தூய்மை இல்லாமல் சுகாதா ரசீர் கேடு கெட்டு இருப்பதாக குற்றம் சாட்டி மாணவர்கள் மற்று ம் பெற்றோர்கள் திடீர் சாலை மறியல்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகேஉள்ளபள்ளத்திவிடுதிகிராமத்தில் அரசு தொடக்கப் பள்ளி உள்ளது. இந்த பள்ளி ஐந் தாம் வகுப்பு வரை உள்ளது. 72 மாணவ மாணவியர்கள் கல்வி ப யின்று வருகின்றனர். பள்ளியில் தலைமை ஆசிரியர் தவிர மற் ற மூன்று ஆசிரியர்கள் தற்போது பணியில் இருந்து வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பள்ளி வளாகம் கழிவறை வகுப்பறைகள் தூய் மை பராமரிக்கவில்லை சுகாதார சீர்கேடு ஏற்படுத்தும் வகையி ல் குப்பை கோலங்களாக காட்சியளிப்பதாக குற்றம் சாட்டி பள்ளி யில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பள்ளி மா ணவர்கள் பள்ளியின் வளாகத்திலேயே பள்ளிக்கு உள்ளே செல்லாமல் நிறுத்தி வைத்து முற்றுகையில் ஈடுப்பட்டிருந்தனர். இது குறித்து ஆலங்குடி போலீஸ் மற்றும் திருவரங்குளம் வட்டா ர கல்வி அலுவலருக்கு ஆசிரியர்கள் தகவல் தெரிவித்தனர்.. அ ங்கு வந்த திருவரங்குளம் வட்டார கல்வி அலுவலர் அரங்கநாதன்மற்றும்ஆலங்குடி போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவசுப்பிரமணிய ன் மற்றும் போலீசார் ஊர் பொதுமக்கள் அங்கு திறன்டனர்.

இதையடுத்து இவர்கள் வருவதற்கு முன்னதாக ஆலங்குடியில் இருந்து கொத்தமங்கலம் செல்லும் பள்ளிக்கு முன்பு உள்ள சா லையில் கடந்த 6 மாதங்களாக பள்ளிக்கு தலைமையாசிரியர் இ ல்லாத சூழல் நிலவி வருவதாகவும் பெற்றோர் மற்றும் பள்ளி மே லாண்மை குழுவினர் குற்றம் சாட்டியதோடு, பல முறை ஆசிரியர் களிடம் முறையிட்டதோடு, பள்ளி மேலாண்மை குழுவில் தீர்மான ம் ஏற்றி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறி மறியலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து பெற்றோர்ர் ஆசிரியர் கழகத் தலைவரும் திமுக நிர்வாகியுமான மணிகண்டன் பள்ளிக்கு எதிரில் உள்ள சாலை யில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களோடு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாலை மறியல் குறித்து தகவல் அறிந்த பள்ளத்திவிடுதினயை சேர்ந்த புதுக்கோட்டை இந்து மாவட்ட முன்னணி செயலாளர் அபிமன்யு முருகேசன் சம்பவ இடத்திற்கு வந்து சாலை மறிய ல் செய்வது எதற்கு மாணவர்களை அமர வைத்திருக்கீர்கள் என் று கேள்வி கேட்டதோடு மாணவர்களை வகுப்பறைகளுக்கு அனுப்புமாறு கூறியதாக கூறப்படுகிறது.

இதில் பெற்றோர் தரப்பிற்கும் முருகேசனுக்கும் வாக்குவாதம் முற்றிய நிலையில் தள்ளுமுள்ளு கைகலப்பு .ஏற்பட்டதோடு இவ ர்கள் ஒருவருக்கொருவர் சட்டையை பிடித்து கிழிதத்து அவரை கீழே தள்ளி கட்டி உருண்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்ட து.



# முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

## ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!!

காவேரிப்பட்டினம் டிச.7

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் பாரூரில் நடைபெற்றது

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் கேபிஎம். சதீஷ்குமார் கலந்து கொண்டு அம்மா அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பையூர் ரவி, முன்னாள் ஒன்றியகழகசெயலாளர்எம்எஸ்.பிரபாகரன், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் பண்ணந்தூர்பழனிசாமி, தொழிலதிபர்பழனி, ஒன்றிய பொருளாளர் ராமன், ஒன்றிய துணைச் செயலாளர் சுரேந்திரன், சார்பு அமைப்பு ஒன்றிய செயலாளர்கள் கணேசன், கண்ணப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சிவலிங்கம், இளங்கோ, சக்திவேல், முன்னாள் ஊராட்சி கழக செயலாளர் வேடியப்பன், கழக நிர்வாகிகள் சங்கர், கணேசன், பெரியசாமி, குமார், வீரப்பன், சிவக்குமார், புருஷோத்தமன், சரவணன் சிராஜ் ஜெய்ஹிந்த், குமரி நாதன், வேடியப்பன், தண்டபாணி, சீனிவாசன், கோகுல கண்ணன், தயாளன், ராஜப்பன் மற்றும் 300க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரத்தில் முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின்9 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி 23வது வார்டு நகர மன்ற உறுப்பினர் கோதண்டராமன் தலைமையில் சார்பில் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது அப்பகுதியில் உள்ள அதிமுக தொண்டர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

### திருப்பரங்குன்றம் விவகாரம்:

# சேலத்தில் தி.மு.க. வக்கீல்கள் ஆர்ப்பாட்டம்!

சேலம் டிச 07

சேலம் மாவட்ட திமுக வழக்கறிஞர் பிரிவு சார்பில் சேலம் ஒருங்கிணைந்த நீதி மன்ற வளாகம் முன்பு வழக்கறிஞர் பிரிவு மாவட்டத் தலைவர் கார்த்திகேயன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில்திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றுவது தொடர்பாக தற்போது நீதிபதி அளித்துள்ள தீர்ப்பை அமல்படுத்த கூடாது, மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும், இப்பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே விசாரணை மேற்கொண்டு 2016 – ம் ஆண்டு இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு அளித்த தீர்ப்பினை தொடர்ந்து அமல்படுத்த வேண்டும், தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்கை நிலை நாட்ட வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் வழக்கறிஞர் பிரிவு மாவட்ட அமைப்பாளர் ராம்பிரகாஷ், மாநகர அமைப்பாளர் சீனிவாசன், வழக்கறிஞர்கள் துரைராஜ் மணிகண்டன், அலி ஜான், தமிழரசன், சரவண தீபன், சரவணன், மோகன், குணசேகரன், இசையமுதன், மஞ்சுளா உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

### தம்மம்பட்டி அருகே

# 'நலம் காக்கும் ஸ்டாலின்' முகாம்!

தம்மம்பட்டி,டிச.7

தம்மம்பட்டி அருகே நாகியம்பட்டி ஊராட்சியில், 'நலம் காக்கும் ஸ் டா லின் ', ம ரு த் து வ முகாம், நாளை (சனிக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது.

இதில் எலும்பு, மகப்பேறு, குழந்தை நலம், இருத ய நோ ய் , ந ர ம் பி யல், தோல், கண், பல், காது மூக்கு, தொண்டை மனநலம், முடநீக்கு இயல் மருத்துவம், நெஞ்சகம் நோய், நீரிழிவு உள்ளிட்டவைகளில் ஏற்படும் அனைத்து நோய்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்படும். மேலும் சித்த மருத்துவ சிகிச்சையும் வழங்கப் படும். எனவே, இப்பகுதியைச்சுற்றியுள்ள பொதுமக்கள் அனைவரும் இந்த மருத்துவ முகாமில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என்று, கெங்கவல்லி வட்டார அரசு தலைமை மருத்துவர் வேலுமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பாலக்கோடு அருகே

# மண் கடத்திய டிப்பர் லாரி பறிமுதல்!

## டிரைவர் கைது!!

பாலக்கோடு. டிச.7

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு சுற்று வட்டார பகுதிகளில் சட்டவிரோதமாக தொடர்ந்து நொரம்பு



மண்கடத்துவதாகமாவட்ட நிர்வாகத்திற்க்கு புகார்கள் சென்றது.

மாவட்ட ஆட்சியர் சதிஷ் அவர்களின் உத்தரவின் பேரில் பாலக்கோடு போலீசார் தீவீர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்,

பாலக்கோடு அடுத்த தண்டுகாரனஅள்ளி ஏரியில் டிப்பர் லாரியில் நொரம்பு மண் நிரப்பி கொண்டிருந்தவர் போலீசாரை கண்டதும் தப்பி ஓடி முயன்றார்.

அவரை பிடித்து விசாரித்ததில் வெள்ளி சந்தை பகுதியை சேர்ந்த நந்தீஷ்குமார் (28) என்பதும் லாரி உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் என்பதும், சட்ட விரோதமாக நொரம்பு மண் கடத்தலில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்தது, டிப்பர் லாரியை பறிமுதல் செய்த போலீசார்

நந்தீஷ்குமாரை கைது செய்து தர்மபுரி சிறையில் அடைத்தனர்.

### சிசுவின் பாலினம் கண்டறிந்த வழக்கில்

# பெண் உள்பட 2 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது!

பாலக்கோடு. டிச.7

தர்மபுரிமாவட்டம், பாலக்கோடு அரசு மருத்துவமணையில் கர்ப்பிணி பெ ண்களின் கருவில்உள்ளசிசு ஆ ணா?பெ ண்ணா? என பாலினம் கண்டறிந்த வழக்கில் ஆந்திராமாநிலத்தை சேர்ந்த கிளாராமேனகா தேவி (41) பிரதீப் (26) மற்றும் அனுமந்தபுரம்கிராமத்தை சேர்ந்த வடிவேல் (41) உட்பட 5 பேர் இதில் இடைத்தரகர்களாக செயல்பட்டது தெரிய வந்தது,

இதனையடுத்து கடந்த மாதம் 17ம் தேதி ஆந்திரா மாநிலம் சித்தூர் பகுதியில் பதுங்கி இருந்த இடைத்தரகர்களான கிளரா மேனகா தேவி மற்றும் பிரதீபை போலீசார் கைது செய்து தர்மபுரி சிறையில் அடைத்தனர். தொடர்ந்து இவர்கள் சட்டவிரோதமாக பாலினம் கண்டறிந்து வருவதால் இவர்கள் இருவர் மீதும் மாவட்ட ஆட்சியர் சதிஷ் குண்டாசில் சிறையில் அடைக்க உத்தவிட்டார்.



காவிரி நதிநீர் மேலாண்மை வாரிய தலைவர் ஹல்தர் தலைமையிலான காவிரி ஒழுங்காற்று குழுவினர் மேட்டூர் அணையை ஆய்வு செய்தார்.



திருவள்ளூர் மாவட்டம் ஜெ.என். சாலை தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப். அரசு உயர் மற்றும் மேல் நிலை பள்ளி ஆசிரியர்களுக்கு ஆற்றல் மன்றம் அதன் செயல்பாடுகள் பற்றியும் மின் சிக்கனம் மற்றும் மின் பாதுகாப்பு குறித்தும் ஒரு நாள் பயிற்சியினை துவக்கி வைத்து உறுப்பினர் அணி வில்லை (பேட்ஜ்) வெளியீட்டார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொ.கற்பகம் மேற்பார்வை பொறியாளர்/மின் தேவை தரப்பு மேலாண்மை பொறி.அருணா முரளீதரன் மேற்பார்வை பொறியாளர்/திருவள்ளூர் மின் பகிர்மான வட்டம் பொறி.அ.சேகர், மின் தேவை தரப்பு மேலாண்மை/செயற் பொறியாளர் (பொ) பு.இராமதாஸ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



# வளர்ச்சியில் ஆற்காடு முன்னோடியாக தன்னலமின்றி சேர்மன் பென்ஸ் பாண்டியன் உழைப்பு!

## அமைச்சர் காந்தி பாராட்டு!!

ராணிப்பேட்டை, டிச,7

ஆற்காட்டில் கால்வாய்கள் புணரமைப்பு துவக்க விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் காந்தி ஆற்காடு வளர்ச்சிக்கு தன்னலமின்றிநகர சேர்மன் தேவி பென்ஸ்பாண்டியன் உழைத்துவருகிறார்.

என பாராட்டினார்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பஸ் ஸ்டாண்டு அருகே நீர்வளஆதாரத்துறை சார்பில் ரூ.18 கோடி செலவில் கால்வாய்கள் புணரமைக்கும் பணி துவக்கவிழா நடந்தது.

கலெக்டர் சந்திரகலா தலைமை தாங்கினார். எம் எல் ஈஸ்வரப்பன், ஆற்காடு டவுன் சேர்மன் தேவி பென்ஸ்பாண்டியன் முன்னிலை வகித்தனர். நீர்வள ஆதாரத்துறை கண்காணிப்பு பொறியாளர் பவளக் கண்ணன் திட்டம் குறித்து விளக்கினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் காந்தி கலந்து கொண்டு கால்வாய்கள் புணரமைப்பை துவக்கி வைத்து பேசினார் அப்போது தமிழ்நாடு முதலமைச்சராக ஸ்டாலின் பொறுப்பேற்றது முதல் பாகுபாடின்றி பொது மக்களின் அடிப்படை தேவைகளையறிந்து உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறார் அந்த வகையில் ஆற்காடு மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கிளைவ்பஜார் முப்பது வெட்டி கால்வாய்களைபுணரமைப்புக்கு நிதி ஒதுக்கீடாகி பணிகள் தொடக்கியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது குறிப்பாக பேருந்து நிலையம்., சாலைகள் , பூங்கா, கழிவு நீர் வசதிகள, தட்டுப்பாடில்லா குடிநீர் உள்ளிட்டஅனைத்திலும் ஆற்காடு தன்னிறைவை அடைந்துவருகிறது ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஆற்காடு அனைத்து வளர்ச்சிகளிலும் முன்னோடியாக உள்ளது. நகராட்சி சேர்மன் தேவி பென்ஸ்பாண்டியன் தன்னலமற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறார். பொது மக்களின்அடிப்படை பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண நட்டிவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என்றார். இந்நிகழ்ச்சியில் யூனியன் சேர்மன்கள் புவனேஸ்வரி சத்தியநாதன், அசோ க், துணை சேர்மன் ரமேஷ் டவுன்துணை சேர்மன் பவளக்கொடி சரவணன், உதவி செயற் பொறியாளர். குமார், , மற்றும் பலர் உடன் இருந்தனர்.




திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையத்தில், மாவட்ட நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை, பொது நூலக இயக்ககம் மற்றும் BAPASI இணைந்து நடத்தும் 5ஆம் ஆண்டு புத்தகத் திருவிழாவின் ஆறாம் நாளான திருப்பத்தூர் வழக்கறிஞர்/கவிஞர் பெ.மணிமொழி அவர்கள் "ஆதலினால் காதல் செய்வீர்" என்ற தலைப்பில் கருத்துரையும், சென்னை, வழக்கறிஞர்/ சமூகச் செயற்பாட்டாளர் மதிவதனி "நூற்றாண்டின் சொல்" என்ற தலைப்பிலும சிறப்புரையாற்றினார்கள். உடன் திருப்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன், மாவட்ட நூலக அலுவலர் திருமதி.மு.பிரேமா, திருப்பத்தூர் வட்டாட்சியர் நவநீதம் உட்பட பலர் உடனிருந்தனர்.



விழுப்புரத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 9 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு விழுப்புரம் மாவட்ட மாணவரணி செயலாளர் சக்திவேல் ஏற்பாட்டில் விழுப்புரம் நகர செயலாளர்கள் பசுபதி ராமதாஸ், ஆகியோர் தலைமையில் அதிமுக நிர்வாகிகள் அலங்கரிக்கப்பட்ட அம்மாவை திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதைசெலுத்திபொதுமக்களுக்குஅன்னதானத்தைவழங்கினார்கள். இதில்பொதுக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், அதிமுக நிர்வாகிகள் திருப்பதி பாலாஜி, குமரன், வரதன், கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கூட்ட நெரிசலை பயன்படுத்தி

# பெண் பயணியிடம் பணம் திருட்டு! இளம்பெண்கள் கைது!!

மேட்டுப்பாளையம், டிச.07–

மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் இருந்து வனபத்ரகாளியம்மன் கோவில் செல்லும் பேருந்தில் தனது உறவினர்களை பார்க்க கூடலூரை சேர்ந்த பாரத் செல்வி(38) என்பவர் பயணித்துள்ளார். பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்ததால் பாரத் செல்வி நின்று பயணித்துள்ளார்.

அப்போது, இரு இளம்பெண்கள் பாரத் செல்வியின் மீது கூட்டத்தில் உரசுவது போல் உரசியுள்ளனர். இதனை உணராத பாரத் செல்வி சத்திய மூர்த்தி நகர் பேருந்து நிறுத்தம் வந்த போது நடத்துனரிடம் டிக்கெட் கேட்டு பணத்தை எடுக்க கைப்பையை திறக்க முயன்றுள்ளார்.

அப்போது, ஏற்கனவே கைப்பை திறந்த நிலையில் இருந்துள்ளதையும், கைப்பையில் வைத்திருந்த பணம் திருட்டு போனதையும் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். உடனடியாக சுதாரித்து கொண்ட பாரத் செல்வி நடத்துனரிடம் பேருந்தை நிறுத்துமாறும், தன் பணம் காணவில்லை என்பதையும் கூறியுள்ளார்.

அப்போது, பேருந்தை நிறுத்தும் போது பாரத் செல்வியின் பின்னால் உரசிக்கொண்டிருந்த இருவரும் வேகவேகமாக பேருந்தில் இருந்து இறங்க முற்பட்டுள்ளனர். சக பயணிகளும், பாரத் செல்வியும் அந்த இரு இளம்பெண்களையும் கையும், களவுமாக பிடித்து விசாரித்ததில் பணத்தை திருடியது அஞ்சலி(27) மற்றும் ரம்யா(28) என்பது தெரிய வந்தது. உடனடியாக மேட்டுப்பாளையம் காவல் நிலையத்திற்கு எஸ்.எம். நகரை சேர்ந்த பொதுமக்கள் தகவல் தெரிவித்துள்ளனர். விரைந்து சென்ற மேட்டுப்பாளையம் போலீசார் இருவரையும் பிடித்து காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டனர். போலீஸாரின் விசாரணையில் அஞ்சலி என்பவர் மீது திருப்பூர், திருநெல்வேலி முன்னீர் பள்ளம், தென்காசி கடையம் ஆகிய காவல் நிலையங்களில் வழக்குகள் இருப்பதும், தற்போது சேலம் இரயில்வே ஸ்டேஷன் அருகே உள்ள டென்ட்டுகளில் தங்கியிருந்தது இதுபோன்று கைவரிசை காட்டி வருவதும் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்து கைது செய்த மேட்டுப்பாளையம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சின்னக்காமனன் தலைமையிலான போலீசார் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# தண்ணீர் தொட்டியில் மூழ்கி 5 வயது சிறுமி பலி!

கோவை, டிச.7–

கோவை இடையர்பாளையம் டிவிஎஸ் நகரை சேர்ந்தவர் ரமேஷ் (42). இவரது மகள் ரியா (5). இவர் அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் எல்கேஜி படித்து வந்தார். இந்த நிலையில் நேற்று சிறுமி ரியாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் போனதால் பள்ளிக்கு செல்லாமல் வீட்டில் இருந்தார். அப்போது ரியா இயற்கை உபாதை கழிக்க குளியலறைக்கு சென்றுள்ளார். வெகு நேரமாகியும் அவர் திரும்பி வராததால் குடும்பத்தினர் குளியலறைக்கு சென்று பார்த்தார். அங்கு சிறுமி ரியா தண்ணீர் தொட்டியில் மூழ்கி மயங்கி கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். உடனே குடும்பத்தினர் அவரை மீட்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அவரை பரிசோதனை செய்த டாக்டர் கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்படி அறிவுறுத்தி உள்ளனர். இதையடுத்து சிறுமியை கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிறுமி ரியாவை பரிசோதனை டாக்டர் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தார். இதை கேட்டு சிறுமியின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் கதறி அழுதனர். இதுகுறித்து கவுண்டம்பாளையம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து சிறுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



### தர்மபுரியில்

# லாரியில் கடத்திய 30 டன் ரேசன் அரிசி பறிமுதல்!

தர்மபுரி, டிச.7

தர்மபுரியில் கிருஷ்ணகிரி – சேலம் தேசிய நெடுசாலையில் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்ற புலனாய்வு துறை இயக்குனர் ருபேஷ் குமார் மீனா உத்தரவின் பேரில் கோயம்பத்தூர் எஸ்.பி. பாலாஜி சரவணன் மேற்பார்வையில் ஈரோடு டிஎஸ்பி ராஜபாண்டி தலைமையில் கிருஷ்ணகிரி இன்ஸ்பெக்டர் சிவனேஸ்வரன், சப் இன்ஸ்பெக்டர் யாசர் மௌலானா, எஸ்.எஸ்.ஐ. மணிகண்டன் உள்ளிட்டோர் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது தர்மபுரி பென்னாகரம் பிரதான சாலையில் சந்தேகத்திற்கிடமாக நிறுத்தப்பட்டிருந்த லாரியில் ரேஷன் அரிசி உள்ளதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அந்த வாகனத்தை சோதனை செய்தனர்.

அதில் தமிழக அரசால் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பொது விநியோகதிட்ட ரேஷன் அரிசி 600 மூட்டைகளில் மொத்தமாக 30,000 கிலோ (30டன்) இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து அந்த வாகனம் மற்றும் கடத்தப்பட்ட ரேஷன் அரிசியை கைப்பற்றினர்.

ரேஷன் அரிசி கடத்தலில் ஈடுபட்ட தர்மபுரி மாவட்டம் சாமிசெட்டிப்பட்டியை சேர்ந்த ராமசாமி மகன் ஆனந்தகுமார் (43) கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் இந்த ரேஷன் அரிசி கடத்தல் தொடர்பாக தர்மபுரி குடிமை பொருள் வழங்கல் மற்றும் குற்ற புலனாய்வுதுறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

### காவேரிப்பட்டணம் பஸ் நிலையம் எதிரில்

# கால்வாய்க்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணி தாமதம்!

## துரிதப்படுத்த கோரிக்கை!!

காவேரிப்பட்டணம், டிச.7

காவேரிப்பட்டணம் பஸ் நிலையம் எதிரில் கிடப்பில் போடப்பட்டுள்ள தடுப்பு சுவர் அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் நகரின் மைய பகுதியில் பஸ் நிலையம் அமைந்துள்ளது. இந்த பஸ் நிலையம் எதிரில் சுபாஷ் சந்திர போஸ் சாலை அமைந்துள்ளது. இந்த சாலையை கொசமேடு, கால் வே அள்ளி, சாப்பரம் உள்பட பல்வேறு பகுதி மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் இந்த சாலையின் நுழைவு வாயில் பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்பு பாதாள சாக்கடை திட்டத்திற்காக கால்வாய் அமைக்கப்பட்டது.

கால்வாய்க்கும், சாலைக்கும் இடையே பெரிய அளவிலான பள்ளம் உள்ளதால் வாகன ஓட்டிகளின் நலனுக்காக பாதாள சாக்கடை கால்வாயையொட்டி தடுப்பு சுவர்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. இந்த பணிகளுக்காக கால்வாயையொட்டி கான்கிரீட் தளம் அமைக்கும் பணி தொடங்கியது.

ஆனால் அந்த பணிகள் முழுமை பெறாமல் கான்கிரீட் கம்பிகள் ஆபத்தான நிலையில் விடப்பட்டுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் அச்சத்துடன் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

தற்போது மழைக்காலமாக உள்ளதால் கான்கிரீட் கம்பிகள் வெளியே இருப்பது கூட பலருக்கும் தெரியாத நிலை உள்ளது.

இதனால் விபத்தோ, உயிர்ப் பலியோ ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. மேலும் பாதாள சாக்கடை கால்வாயில் குப்பைகள் கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது.

எனவே உடனடியாக அதிகாரிகள் இங்கு ஆய்வு செய்து தடுப்பு சுவர் கட்டும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# வேலை வாங்கி தருவதாக ரூ.3.50 லட்சம் மோசடி!

கோவை, டிச.7–

கோவை சின்ன வேடம்பட்டியைச் சேர்ந்தவர் டேனியல் (50). இரவது மகன் ஜேம்ஸ் (25). இவர் கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் சமையல் கலை முடித்து வேலை தேடி வருகிறார். இந்த நிலையில் ஜேம்சுக்கு கல்லூரி பேராசிரியர் ஒருவர் மூலம் ஈரோடு மாவட்டம் மோலபாளையம், சின்ன செட்டிபாளையத்தைச் சேர்ந்த அருண் (42) என்பவர் அறிமுகமாகி உள்ளார்.

அவர் ஜேம்சிடம் வெளிநாட்டு ஓட்டல்களில் வேலை காலியாக இருப்பதாகவும், அங்கு வேலையை பெற்று தருவதாகவும் கூறியுள்ளார். அதற்கு விசா உள்ளிட்ட ஆவணங்களுக்கு ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் செலவாகும் என கூறியுள்ளார். இதற்கிடையே ஜேம்சிடம் வெளிநாட்டில் இருந்து பேசுவது போல அருண் வாட்ஸ் அப் காலில் பேசியுள்ளார். அதை நம்பி ஜேம்ஸ் பணத்தை தர ஒப்பு கொண்டார்.

தொடர்ந்து ஜேம்ஸ் தனது தந்தை டேனியலிடம் இருந்து ரூ. 3 லட்சத்து 50 ஆயிரத்தை பெற்று அருணிடம் கொடுத்துள்ளார். அதன் பின்னர் வெகு நாட்களாகி அருண் வேலை வாங்கி தரவில்லை. பணத்தை திருப்பி கேட்டபோது பணத்தையும் திருப்பி தரவில்லை. அருண் மோசடியில் ஈடுபட்டதை அறிந்த ஜேம்சின் தந்தை டேனியல் இதுகுறித்து மாநகர சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மோசடியில் ஈடுபட்ட அருணை கைது செய்து, சிறையில் அடைத்தனர். அருண் மீது சேலம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வேலை வாங்கி தருவதாக மோசடியில் ஈடுபட்ட வழக்குகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# மனைவியை துன்புறுத்திய கணவன் மீது வழக்கு!

கோவை, டிச.7–

கோவை குனியமுத்தூரை சேர்ந்தவர் 28 வயது டாக்டர். இவருக்கும் கேரளா மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த 36 வாலிபருக்கும் கடந்த 2022ம் ஆண்டு திருமணம் நடந்தது. அப்போது டாக்டரின் குடும்பத்தினர் 22.5 பவுன் நகைகளை வரதட்சணையாக மாப்பிள்ளை குடும்பத்தினருக்கு கொடுத்துள்ளனர்.


இந்த நிலையில் டாக்டரின் கணவருக்கு அவருடன் வேலை செய்து வரும் பெண்ணுடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளது.

அதனை அறிந்த டாக்டர் தனது கணவரிடம் கேட்டு, கண்டித்துள்ளார். இதனால் அவர், தனது மனைவியை துன்புறுத்தி வந்தார்.

மேலும் டாக்டரை மேல் படிப்பு படிக்க விடாமல் அவரது கணவரும், குடும்பத்தினரும் டார்ச்சர் செய்து வந்துள்ளனர். இதுகுறித்து டாக்டர் கோவை தெற்கு அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் போலீசார் டாக்டரின் கணவர், அவரது தாயார் மற்றும் அக்கா மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் பயனடைந்த கோவை மாவட்ட பயனாளி முதலமைச்சருக்கு நன்றி!





கோயம்புத்தூர் மாவட்டம், கடந்த நான்கரை ஆண்டுகளில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் ரூ. 15.38 கோடி நிதி வழங்கப்பட்டு 9,105 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

ஜமீன் ஊத்துக்குளியில், தோட்டக்கலை துறையின் மூலம் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் பசுமைக்குடில் அமைத்து, உயர் தொழில்நுட்ப நீரியல் வளர்ப்பு முறையில் வெள்ளரி சாகுபடி செய்யப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளியை சேர்ந்த விவசாயி செல்வராஜ் அவர்கள், தோட்டத்தில் ரூ.16.88 இலட்சம் மானியத்துடன் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் உயர்தொழில்நுட்ப பசுமை குடில் அமைத்து வெள்ளரி சாகுபடி செய்துள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் செய்தியாளர் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இச்செய்தியாளர் பயணத்தின்போது துணை இயக்குநர் தோட்டக்கலைத்துறை சித்தார்த்தன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆனந்தகுமார், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் (பொள்ளாச்சி தெற்கு) திருமதி. சௌமியா, உதவி தோட்டக்கலை அலுவலர் ஆறுச்சாமி உட்பட பலர் கலந்துகொண்டார்.

இச்செய்தியாளர் பயணத்தின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளியை சேர்ந்த விவசாயி செல்வராஜ் அவர்கள் தோட்டத்தில் ரூ.16.88 இலட்சம் மானியத்துடன் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் உயர் தொழில் நுட்ப பசுமை குடில் அமைத்து வெள்ளரி சாகுபடி செய்துள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அப்பசுமை குடிலில் பயிரிடப்படும் பயிர்கள் குறித்தும், சந்தைப்படுத்துதல் குறித்து கேட்டறியப்பட்டது.

மேலும், தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் இதுபோன்ற உயர் தொழில்நுட்ப திட்டங்களின் மூலம் பட்டதாரி விவசாயிகள் மற்றும் சிறு, குறு விவசாயிகள் குறைந்த இடத்தில் அதிக இலாபம் ஈட்ட முடியும் என்பதால் வரும் ஆண்டுகளில் இதுபோன்ற திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, அதிக விவசாயிகள் உயர் தொழில்நுட்ப பசுமைகுடில் அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் 40 சதவீத மானியத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பு அதிகரித்தல், பழைய தோட்டங்களை புதுப்பித்தல். 50 சதவீத மானியத்தில் நீர் சேமிப்பு கட்டமைப்பு, பசுமைக்குடில் அமைத்தல், நிழல்வலை கூடாரம், நிலப்போர்வை அமைத்தல், ஒருங்கிணைந்த உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மேலாண்மை, தரம் பிரித்து சிப்பம் கட்டும் அறை. வெங்காய சேமிப்புக் கிடங்கு, நடமாடும் விற்பனை ஊர்தி ஆகிய அறுவடை பின் செய் நேர்த்தி இனங்கள், மகரந்தச் சேர்க்கையை ஊக்குவிக்க தேனீ பெட்டிகள், தேனீ காலனிகள், தேன் எடுக்கும் இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க மானியம் வழங்குதல் உள்ளிட்ட வகையில் கடந்த நான்கரை ஆண்டுகளில் ரூ.15.38 கோடி மதிப்பில் 9,105 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். என மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



இச்செய்தியாளர் பயணத்தின்போது தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் பசுமைகூடாரம் அமைத்து பயன் பெற்ற பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளியை சேர்ந்த விவசாயி செல்வராஜ் அவர்கள் தெரிவித்தாவது,

என் பெயர் செல்வராஜ் நான் ஜமீன் ஊத்துக்குளியில் கடந்த 25 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். கடந்த ஆண்டு தோட்டக்கலை துறையின் மூலமாக ஒரு ஏக்கர் பரப்பளவில் ரூ.16.88 இலட்சம் மானியத்துடன் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் உயர் தொழில் நுட்ப பசுமை குடில் அமைத்து வெள்ளரி சாகுபடி செய்து இருந்தேன். தட்பவெப்ப நிலையைக் கட்டுப்படுத்த முடிகின்ற காரணத்தினால் வருடத்தின் எல்லாக் காலத்திலும் பயிர் செய்ய முடிகிறது. அதனால் ஆண்டு முழுவதும் வருமானம் கிடைக்கின்றது. சந்தையில் பருவமில்லாத காலத்தில் வரும் விளைப் பொருட்களுக்கு அதிக வரவேற்பும், அதிகவிலையும் உள்ளது. தொடர்ந்து, உற்பத்தி செய்ய முடிவதால் பசுமைக் கூடாரம் என்போன்ற விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், லாபகரமாகவும் உள்ளது இந்த திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர்மாவட்டம்**

### வாழப்பாடி அருகே

# பைக் மீது பஸ் மோதி கூலித் தொழிலாளி பலி!



வாழப்பாடி. டிச:7

சேலம் மாவட்டம் வாழப்பாடி அருகே துக்கியாம்பாளையம் சேர்ந்தவர் சத்யராஜ் என்ற ராஜமாணிக்கம், கூலி தொழிலாளி இவர் காலையில் வாழப்பாடியில் இருந்துதுக்கியாம்பாளையத்தில் உள்ள அவரது வீடு நோக்கி பைக்கில் சென்றார்.

சேலம் கருமந்துறை நெடுஞ்சாலையில் யதுாக்கியாம்பாளையம் அருகே சென்றபோது பாப்பநாயக்கன்பட்டியில் இருந்து வந்த தனியார் பேருந்து சத்யராஜ் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் மீது மோதியது. இதில் படுகாயமடைந்த சத்யராஜ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். தகவல் அறிந்த வாழப்பாடி போலீசார் சத்யராஜ் உடலை கைப்பற்றி உடல் கூறு ஆய்வுக்காக வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சபரிமலை சீசனையொட்டி

# தெலுங்கானா-கொல்லம் இடையே சிறப்பு ரெயில்!

## திருப்பூர், ஈரோட்டில் நின்று செல்லும்!!

கோவை, டிச.7

சேலம் ரெயில்வே கோட்டநிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்கூறியிருப்பதாவது; சிர்பூர் காகஸ்நகரில் இருந்து டிசம்பர்13ந் தேதி காலை 10மணிக்குப் புறப்படும் சிர்பூர்காகஸ்நகர் கொல்லம் சிறப்பு ரெயில் மறுநாள் இரவு பத்து மணிக்கு கொல்லம் ரெயில் நிலையத்தை சென்றடையும். மறுமார்க்கமாக கொல்லத்தில் இருந்து டிசம்பர் 15 ந் தேதி அதிகாலை 2.30 மணிக்குப்புறப்பட்டு கொல்லம் – சிர்பூர்காகஸ் நகர் ரெயில் மறுநாள் நண்பகல்12.30 மணிக்கு சிர்பூர்காகஸ்நகர் நிலையத்தை வந்தடையும். இந்த ரெயில் வரங்கல், கேஸமுத்ரம், மஹபூபாபாத், விஜய வாடா, தெனாலி, .சிராலா, ஓங்கோல். நெல்லூர், ரேணிகுண்டா, திருப்பதி, சித்தூர், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர், போத்தனூர், பாலக்காடு, திருச்சூர், ஆலுவா, எர்ணாகுளம் டவுன், கோட்டயம், திருவல்லா செங்கண்ணூர், காயன்குளம், ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.